19th January 1965]

Southern Railway (bifurcation of)

* 6 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether the Union Government consulted the State Government regarding the proposal to bifurcate the Southern Railway into two zones; and

(b) if so, the details of the proposal?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தின் கீழ் தான் இந்த விஷயம் இருக்கிறது என்றாலும் மத்திய அரசாங்கத்திற்கு இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் இங்குள்ள அமைச்சர்களுக்கு இதில் ஏதாவது கருத்து உண்டா?

கனம் திரு. வெ. ராமையா: சமீபத்தில் யூனியன் பார்லிமென்டரி சபையில் கனம் ரயில்வே மந்திரி அவர்கள் இவ்வாறு ஒரு ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மேலும் விவரங்களை நாம் கேட்டிருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், தென் பிராந்திய ரயில்வேயை இரண்டாகப் பிரித்தால் நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்குச் சாதகமாக இருக்கும் என்பது இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயமா இல்லையா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: இந்த விஷயம் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. இதில் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை.

இந்தியர்களால் பர்மாவில் விடப்பட்ட சொத்துக்கள்

* 7. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பர்மாவிலிருந்து நமது நாட்டுக்கு வந்துள்ள அகதிகளின் சொத்துக்களுக்கு நஷ்டஈடு பெற்றுத்தர மத்திய சர்க்காரை நமது மாநில சர்க்கார் கேட்டுக்கொண்டுள்ளதா?

(இ) அதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து என்ன பதில் வந்துள்ளது?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Government of India are in constant touch with the Government of Burma.

[19th January 1965

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இந்த அகதிகளுக்கு பர்மா சர்க்காரால் கொடுக்கப்படவேண்டிய நஷ்டஈடு எல்லாம் உடனடியாகக் கொடுக்கப்படாத காரணத்தால் இவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த பர்மா அகதிகளுக்கு நஷ்ட ஈடு பெற்றுத்தர இன்னும் எவ்வளவு காலம் ஆகும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: எவ்வளவு காலம் ஆகும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. அந்த நாட்டில் ஏற்பட்ட கொள்கையின் அடிப்படையில், அங்கு தொழில்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்டதின் காரணமாக இங்கு அவர்கள் வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதைப்பற்றி பர்மா அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னைப்பற்றி நமது மத்திய அரசாங்க வெளிநாட்டு அமைச்சர் திரு. சுவரன் சிங் அவர்கள் சுமுகமான முறையில் பேச்சுவார்த்தை நடப்பதற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன்: பர்மாவிலிருந்து ஏராளமான அகதிகள் தங்கள் நிலங்களையும் வீடுகளையும் விட்டுவிட்டு இங்கு வந்திருக்கிறார்கள். இவ்வாறு வந்தவர்கள் பெரும்பாலும் தமிழர்களாக இருக்கின்ற காரணத்தால் நமது மாநில சர்க்கார் மத்திய ஆட்சியோடு தொடர்பு கொண்டு இவர்களுடைய கஷ்டங்களைப்பற்றி அழுத்தமாக எடுத்துச்சொல்லி இவர்களுக்குப் பலன் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இல்லையென்றால் இனியாவது அவ்வாறு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த விஷயங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. இருந்தாலும், இதில் சம்பந்தப்பட்டவர்களில் அதிகமான பேர்களும் தமிழர்களாக இருக்கின்ற காரணத்திற்காக நாம் மத்திய அரசாங்கத்தோடு இதைப்பற்றி அடிக்கடி தொடர்பு கொண்டிருக்கிறோம். அதோடு இங்கு இருக்கின்ற கஷ்டங்களையும் சிரமங்களையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஓரளவுக்கு இதன் மூலமாக நன்மை கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, இங்கு வந்து சேர்ந்திருக்கின்ற பர்மா அகதிகளைப் பொறுத்த வரையில் அவர்களுடைய சொத்துக்களை மதிப்பிட்டு, அந்த அளவுக்கு நஷ்டஈடு வேண்டும் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: இவையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் விஷயம் தான். இது போன்ற விஷயத்தை எல்லாம் மத்திய அரசாங்கம் தான் கவனிக்கவேண்டும். நாம் முக்கியமாக இதில் விசேஷ அக்கறை எடுத்து மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறோம்.

19th January 1965]

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த அகதிகளுக்கு நம்முடைய மாநில சர்க்கார் மான்யமாக எவ்வளவு கொடுத்து வருகிறது? அவ்வாறு கொடுக்கப்பட்டு வந்தால் எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப்படும்?

கனம் திரு. வெ. ராமையா: இப்போது வந்தவர்களுக்கு இங்கு வந்து குடியேறுவதற்கான வசதிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். எந்த வேலையும் இல்லாதவர்களுக்கு அவர்களுக்குத் தொழில் செய்வதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்கும் வரையிலும் முகாமில் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு இருப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து: இந்த பர்மா அகதிகளின் சொத்து சம்பந்தமாக மத்திய சர்க்கார் பர்மா சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தையில் இந்த மாநிலத்திலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்களா?

கனம் திரு. வெ. ராமையா: இவ்விதம் நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தைகளில் எல்லாம் நம்முடைய பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. மத்திய அரசாங்கத்தின் மீது நமக்குப் பரிபூரணமான நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் இதைப்பற்றி முறையாக ஏதாவது முடிவு செய்வார்கள்.

திரு. சா. கணேசன்: பர்மாவிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளில் பெரும்பாலோர் தமிழர்களாக இருக்கிறார்கள், இவர்களில் பெரும்பாலோர் கடலோரப் பகுதிகளில் வாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்குச் செய்து கொடுக்கின்ற உதவிகளைப் பாராட்டுகின்ற நேரத்தில், மேலும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற முறையில், இவர்களுக்கு, அந்தமான், நிக்கபார் (நக்கவரம்) லட்சத்தீவு போன்ற இடங்களில் வேலை வாய்ப்பை அளிப்பதற்கு நமது மாநில அரசாங்கம் மத்திய ஆட்சியோடு தொடர்பு கொண்டு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா? இல்லையென்றால், இனிமேலாவது இவ்விதம் செய்வதற்கு முன் வருவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்கள் ஸஜஷன் சொல்லுகிறார்கள். இதைப்போன்ற விவரங்கள் வரும் போது அவற்றை மத்திய அரசாங்கத்திற்கு எழுதுகிறோம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: ஸார், பர்மாவில் இருந்து வந்த அகதிகளுக்குப் போதுமான அளவு நிவாரணம் அளிக்கப்படாததின் காரணமாக, அங்கிருந்து வந்த அகதிகள் பலர் மீண்டும் பர்மாவுக்குச் சென்று அங்கு கைதாகியிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் மதுரையில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடு கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கு பர்மாவிலிருந்து வந்த வாலிபர்களில் ஒருசிலர், ஏதோ இங்கு ஏராளமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தது கிடைக்காமல் திரும்பவும் பர்மாவுக்குச் சென்று விடப்போவதாக அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் போனார்களா இல்லையா என்கின்ற விவரம் சர்க்காருக்குத் தெரியாது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பர்மா அகதிகள் விஷயத்தில் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நமது மாநிலப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை, மத்திய அரசாங்கத்தின் மீது எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கையிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் இலங்கை அகதிகள் பற்றிய பேச்சுவார்த்தை நடந்தபோது இங்குள்ள அமைச்சர் அவர்களையும் அழைத்திருந்தார்கள். அப்படியானால் யாருக்கு யார் மீது நம்பிக்கை குறைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள லாமா?

MR. SPEAKER : The question does not arise.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, பர்மா அகதிகளில் யார் யாருக்கு, எவ்வளவு காலத்திற்கு எந்த அளவுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நஷ்டஈடு என்று சொல்லும்போது எல்லோருக்கும் இப்போது நடந்த நிகழ்ச்சிகள் மட்டும்தான் நினைவிற்கு வருகிறது. பர்மா நாடு சுதந்திரம் அடைந்த போதே, ஆரம்பக் கட்டத்தில் பெரும் செல்வந்தர்கள் எல்லாம் தங்கள் நிலத்தை விட்டு விட்டு வந்தார்கள், அப்போது நிலங்களை எல்லாம் அந்த அரசாங்கம் தேசீய மயமாக்கியது. அதைத் தொடர்ந்துதான் சிறிய தொழில்களையும் தேசீயமயமாக்குவது என்ற கொள்கையை எடுத்துக்கொண்டார்கள். அதன் காரணமாக சிறு தொழில்களை நடத்திக்கொண்டிருந்தவர்கள் வேறு வேலை களைப்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கேயே இன்னும் இருந்து வேறு வேலைகளைப் பார்க்க முடியாதவர்கள்தான் இங்கு திரும்புகிறார்கள். வேறு வேலைகளைப் பார்த்துக் கொண் டிருப்பவர்கள் அங்கேயே இருக்கலாம் என்று அவர்கள் சொல்லு கிறார்கள். இவற்றைப்பற்றி எல்லாம் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் சுமுகமான முடிவு காண் பதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாம்பன்—ராமேஸ்வரம் ரஸ்தா பாலம்

* 8 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராமேஸ்வரத்திற்குச் செல்ல பாம்பன் ரஸ்தா பாலம் அமைக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமென்றால் எப்போது?